## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி - 2015

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்ளும் போது பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான ஒரு விபரமான அறிக்கை கம்பனியின் தலைவருக்கு 2016 ஏப்ரல் 28 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி (சீபிஎல்) பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 1987 இன் 23 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடமையாக்கப்பட்ட வியாபாரங்களை பொறுப்பேற்று பொதுக் கம்பனிகளுக்கு மாற்றுவதன் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்டது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றானதுடன் திறைசேரிச் செயலாளர் கம்பனியின் தனியான பங்குதாரராகவுள்ளார்.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எல்கேஏஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணக்கம்

**எஸ்எல்எவ்ஆர்எஸ் 5 – விற்பனைகளிற்காக வைத்திருக்கப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களும் இடைநிறுத்தப்பட்ட செயற்பாடுகளும்:** ஏலத்திற்காக வழங்கப்பட்ட வாகனங்களில், 5 கை உழவு இயந்திரங்கள், 4 மோட்டார் சைக்கிள்கள், 1 ரூப்பர் மற்றும் 1 சிறிய பெக்கோ என்பன மீளாய்வாண்டின் போது விற்கப்படவில்லை. எவ்வாறாயினும், இந்த வாகனங்கள் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கால்நடையின் நியாயப் பெறுமதி மதிப்பீட்டிலிருந்து இனங்காணப்பட்ட மிகை ரூபா 2,168,000 ஆனதுடன் இது கால்நடையின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடுகையில் 29 சதவீத அதிகாப்பாகவிருந்தது. மேலும் கால்நடை இறப்புக்கள் காரணமாக கால்நடையில் அண்ணளவாக 10 சதவீதம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், கம்பனி தானே மேற்கொண்ட பெறுமதி மதிப்பீடு கணக்காய்வில் திருப்தியளிக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது தென்னை மரங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 19,682,141 ஆன போதிலும் தென்னை மரத்தின் பெறுமதியை கம்பனி அகற்றும் நேரத்தில் இனங்கண்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - 8.9 ஆம் பந்தி | பிரகடனங்கள் மேற்கொண்ட பின்னர் 15 நாட்களுக்குள் இறுதிப் பங்குலாபங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி இந்த ஏற்பாட்டுடன் இணங்குவதற்குத் தவறியிருந்தது. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டி | தேசிய போட்டிக் கேள்விகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி 21 நாட்களாகக் காணப்பட்ட போதும் கம்பனி அதன் பதவியணியினருக்கான விடுதிகளை நிர்மாணிப்பது தொடர்பில் கேள்விகள் கோருவதற்காக 14 நாட்களை மாத்திரம் வழங்கியிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 61,272,891 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 85,782,509 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 147,055,400 ஆன முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. தேங்காய் விற்பனைகளிலிருந்தான வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பன அதிகரித்தமையே மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

**3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழ்வருமாறுள்ளன.

| | 2015 | 2014 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 37 | 40 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 4.74:1 | 4.11:1 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.82:1 | 2.80:1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 24,515,355 ஆல் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப எல்லையில் குறைவொன்றினை பதிவுசெய்தது.

(ஆ) கம்பனி நீண்டகால முதலீட்டு மூலங்களில் மேலதிக தொழிற்படு மூலதனத்தை முதலீடு செய்யாமல் அவற்றைத் தொடர்ச்சியாக பேணியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதனால் கம்பனியின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சில முக்கிய இலக்குகள் மற்றும் அவற்றின் அடைதல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | இலக்குகள் | அடைதல் | இலக்குகளின் சதவீதமாக அடைதல் |
|---|---|---|---|
| தென்னம் பயிர் (தேங்காய்கள் மில்லியனில்) | 16.11 | 12.52 | 77.72 |
| தென்னையொன்றிற்கான சராசரி வருமானம் (தேங்காய்கள்) | 72 | 43 | 60.17 |

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்கான கம்பனிக்குச் சொந்தமான 06 மரச்செய்கைப் பிரதேச தோட்டங்களிலுள்ள தென்னை உற்பத்தி, தேங்காயொன்றிற்கான பங்களிப்பு மற்றும் தேறிய விற்பனை சராசரிகள் என்பவற்றின் ஒப்பீடு கீழே தரப்பட்டுள்ளன.

| தோட்டம் | உற்பத்தி | | | தேங்காயொன்றிற்கான பங்களிப்பு | | | தேறிய விற்பனை சராசரி (என்எஸ்ஏ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 |
| | தேங்காய்கள் மில்லியன் | தேங்காய்கள் மில்லியன் | தேங்காய்கள் மில்லியன் | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| பிங்கிரிய - நிக்கவரட்டிய | 2.3 | 2.3 | 1.5 | 13.60 | 12.41 | 6.58 | 30.13 | 29.41 | 25.46 |
| சிலாபம் | 2.1 | 1.7 | 0.8 | 14.58 | 12.11 | (0.48) | 29.19 | 28.58 | 26.26 |
| திவுலுப்பிட்டிய | 1.6 | 1.8 | 1.8 | 16.07 | 17.84 | 23.73 | 34.69 | 35.03 | 36.31 |
| மாதம்பை | 1.2 | 1.9 | 1.8 | 2.27 | 9.98 | 12.85 | 31.03 | 29.46 | 29.53 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பளுகஸ்வெவ | 3.9 | 3.6 | 2.5 | 14.73 | 12.67 | 12.53 | 29.30 | 27.89 | 28.16 |
| புத்தளம் | | | | | | | | | |
| - மங்கள எலிய | 1.4 | 1.7 | 1.1 | (0.50) | 4.86 | 1.45 | 26.13 | 26.12 | 23.46 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது புத்தளம் மற்றும் மங்கள எலிய பிரதேச தோட்டம் அண்ணளவாக ஒரே தேறிய விற்பனை சராசரியை (என்எஸ்ஏ) பதிவுசெய்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் இது எதிர்மறையான பங்களிப்பை பதிவுசெய்திருந்தது.

(ஆ) திவுலுப்பிட்டிய, மாதம்பை மற்றும் புத்தளம் - மங்கள எலிய பிரதேச தோட்டங்களின் தென்னம் பயிர் 2015 ஆம் ஆண்டில் 1,134,097 தேங்காய்களால் குறைவடைந்திருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### 4.2.1 பிரதான உற்பத்திப்பொருட்களிலிருந்தான வருமானம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரதான உற்பத்திப்பொருட்களிலிருந்து கிடைத்த வருமானம் கீழே தரப்பட்டுள்ளன.

| உற்பத்திப்பொருள் | 2015 | 2014 | முரண் {சாதகமானது/(பாதகமானது)} | |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| தேங்காய் | 367 | 322 | 45 | 14 |
| கொப்பறா | 32 | 52 | (20) | 40 |
| மரமுந்திரிகை | 0.1 | 5.9 | (5.8) | 98 |
| நெல் | 2.4 | 2.3 | 0.1 | 3 |
| தென்னை மரங்களின் விற்பனை | 19.7 | 8.7 | 11 | 128 |
| தேங்காய் மட்டைகள் மற்றும் ஓடுகள் | 7.0 | 7.7 | 0.7 | 9 |
| உப்பு அகற்றல் தொட்டி | 12.6 | - | 12.6 | 100 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொப்பறா மற்றும் மரமுந்திரிகையிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 25.6 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியில் கிடைக்கக்கூடிய மொத்தக் காணி விஸ்தீரணத்தில் அண்ணளவாக 8 சதவீதத்தை கொண்டுள்ள 432 ஹெக்டெயர்கள் நெல் வயலிலிருந்து ரூபா 2.4 மில்லியன் வருமானம் மாத்திரம் கிடைத்திருந்தது.

(இ) ஏனைய தோட்டங்களிலுள்ள மரமுந்திரிகை உற்பத்தி அதிகரித்திருந்த போதிலும் தம்பபன்னி தோட்டத்திலுள்ள மரமுந்திரிகை உற்பத்தியானது 2015 ஆம் ஆண்டில் 10,757 கிலோகிராம் ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

**4.2.2 மிளகு பயிர்ச்செய்கைச் செயற்திட்டம்**

---

மிளகு விற்பனையிலிருந்தான வருமானமானது மிளகுப் பயிர்ச்செய்கை குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தமை காரணமாக 2014 ஆம் ஆண்டின் ரூபா 1,219,760 இலிருந்து 2015 ஆம் ஆண்டில் ரூபா 466,050 இற்கு வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2.3 தேங்காய் பிடுங்குதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாளொன்றிற்கு சராசரியாக விழுந்த தேங்காய்கள் 28 ஆக இருந்த போதிலும் நாளொன்றிற்கு விழுந்த தேங்காய்கள் 88 ஆக இருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், விழுந்த தேங்காய்களில் 68 சதவீதம் முதல் வருமான இழப்பை இது காண்பித்திருந்தது.

(ஆ) 8 சந்தர்ப்பங்களில் 1,562 தேங்காய்கள் மிகையாகக் காணப்பட்டமையும் 5 சந்தர்ப்பங்களில் 165 தேங்காய்கள் குறைவாக காணப்பட்டமையும் 2015 சனவரி 12 இல் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், முகாமைத்துவம் தென்னம் பயிரை சரியாக கணக்கீடு செய்வதற்கு தேவையான அளவீடுகளை எடுத்திருக்கவில்லை.

**4.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு தேவைப்பட்ட ஆண்கள் ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,275,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது வியாபார மேம்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களில் 24 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இந்த கொடுக்கல்வாங்கல் வியாபார மேம்படுத்தலுடன் நேரடியாக தொடர்புபட்டும் இருக்கவில்லை. மேலும், இந்த கொடுக்கல்வாங்கலிற்கு சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காததுடன் அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் தொழிலாளர்கள் மாதம்பை பிரதேச தோட்டத்தில் 5,000 கிளீசீரியா (Gleesieria) செடிகளை நடுவதற்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த போதிலும் இந்த நோக்கத்திற்காக தனியார் தரப்பொன்றிற்கு ரூபா 10,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தம்பபன்னி பிரதேச தோட்டத்தின் பொறுப்பு அலுவலரொருவர் 1995 இல் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியின் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட பிழையான தீர்மானம் காரணமாக நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் அவர் மீள வேலையிலமர்த்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,036,163 சம்பள நிலுவைகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பழுகஸ்வெவவில் உள்ள எண்ணெய் ஆலைச் செயற்பாடுகளிலிருந்து ரூபா 153,791 நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்ததுடன் இந்த செயன்முறையை இலாப நிலைமைக்கு மாற்றம்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்ட்டிருக்கவில்லை.

(ஆ) பௌதீக மெய்மையாய்வின் போது தம்பபன்னி பிரதேச தோட்டத்திலுள்ள 1 ஆம் இலக்கம் மற்றும் 2 ஆம் இலக்கம் உள்ளடங்கலாக 176 கிலோகிராம் கொப்பறாவில் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டதுடன் மற்றுமொரு 125 கிலோகிராம் கொப்பறா நிராகரிக்கும் நிலையில் காணப்பட்டதுடன் நட்டங்களிற்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மோசடி விசாரணைப் பணியகத்திற்கு மேறகொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், பிங்கிறிய தோட்டத்தில் 207,333 தேங்காய்களை மோசடியாக விற்பனை செய்ததன் காரணமாக ரூபா 5,390,658 தொகை நிதி மோசடியாக இனங்காணப்பட்டிருந்தது. பிரதிப் பொது முகாமையாளர் (பெருந்தோட்டம்), தோட்ட அத்தியட்சகர் மற்றும் பொறுப்பு உத்தியோகத்தர் உள்ளடங்கிய மூன்று அலுவலர்கள் அவர்களுடைய கடமைகளிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், சட்டவிரோதமாக தேங்காய் விற்கின்ற ஆபத்தை குறைப்பதற்கு முறையான முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் அமுல்ப்படுத்திக் கண்காணிப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சிலாபம் மற்றும் தம்பபன்னி பிரதேச தோட்டங்களின் 14 வயல்கள் 4 தொடக்கம் 28 வரையான வீச்சில் பயிர் ஒன்றிற்கு குறைந்த வருடாந்த தேங்காய் வருமானத்தை பதிவுசெய்திருந்ததென இது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவத்தால் அவ்வாறே இது தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலக விடுதிகளின் தேவைப்பாடுகளிற்கு இரண்டு இறந்த தேக்கு மரங்களை பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவை உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாமல் 2013 இலிருந்து தம்பபன்னி பிரதேச தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கணக்காய்வில் இனங்காணப்பட்ட தேக்கு மரங்கள் மற்றும் ஏனைய பெறுமதியான மரங்கள் வனவியல் பதிவேடு மற்றும் நுகரக்கூடிய உயிரின சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலதிகநேர வேலைக் கொடுப்பனவை செலுத்தாமல் விடுமுறை நாட்களில் ஊழியர்களை கம்பனி வேலைக்கமர்த்தியிருந்தது. ஆகையால், கம்பனிக்கெதிரான தீர்ப்பொன்றை தொழில் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

(ஆ) 03 பயிலுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளரொருவரை நாட்சம்பள அடிப்படையில் கம்பனி வேலைக்கமர்த்தியிருந்த போதிலும் அத்தகைய பதவிகளுக்கான வெற்றிடங்கள் கணக்காய்வில் இனங்காணப்பட முடியாதிருந்தன.

(இ) முகாமைத்துவ உதவியாளராக தனிநபரொருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மாதமொன்றிற்கு ரூபா 24,017 ஆன அனைத்தும் உள்ளடங்கிய சம்பளத்தை லெுத்துவதற்கும் சபை அங்கீகரித்திருந்தது. இந்த ஆட்சேர்ப்பு எதிர்காலத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிற்கு சாதாரண

சித்தியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்து.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்திற்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் கம்பனி 2015 ஆம் ஆண்டின் போது அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் முகாமையாளர்களின் பொறுப்புக்களை இனங்காணத் தவறியிருந்தது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | வங்கிக் கணக்கு மீதான கட்டுப்பாடு | காசோலை வழங்கப்பட்டு ஆனால் ஆறு மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் சீராக்கப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | கொப்பறா நிலையத்தின் தொழிற்பாடுகள் | நிலையத்தால் கையேற்கப்பட்ட தேங்காய்கள் எண்ணப்பட்டு விநியோகித்தல் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |